செய்தி வெளியீடு எண்: 672 நாள்:02.10.2019

## செய்தி வெளியீடு

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 151ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று(2.10.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, அண்ணல் காந்தியடிகள் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அரசின் சார்பில் அக்டோபர் 2ஆம் நாள் அன்னாரது பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது.

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று(2.10.2019) மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. எ. செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர். வி. சரோஜா அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்கள், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை

அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந.நடராஜன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபீல் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி. எம். ராஜலெட்சுமி அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. க. பாஸ்கரன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக தலைவர் திருமதி.பா.வளர்மதி அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், சென்னை, சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் வழிபாடு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக அமைதி, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தி நடைபெற்ற சைக்கிள் பேரணியினை மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. எ. செங்கோட்டையன் அவர்கள் கொடியசைத்து துவக்கிவைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீதாலட்சுமி,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. உல. ரவீந்திரன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**